செ.வெ.எண்.621 நாள்.07.12.2017

<u>காஞ்சிபுரம் மாவட்டம்</u>

<u>முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் கொடி நாள் வசூலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்</u>

***************

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் கொடிநாள் வசூலை மாவட்டத்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டிற்கு கொடிநாள் வசூல் ரூ.1 கோடியே 83 இலட்சத்து 70 ஆயிரம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரூ.2.23 லட்சம் வசூல் செய்யப்பட்டது. இக்கொடி நாள் வசூல் செய்யும் தொகை முழுவதும் நாட்டிற்காக தன்னலமற்ற சேவை புரிந்த முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனுக்காக செலவிடப்பட்டுள்ளது. எனவே இந்த மேலான நோக்கத்திற்காக அனைவரும் தாராளமாக கொடிநாள் நிதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் மேஜர் சி.ரூபா சுப்புலட்சுமி ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,<br>
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>
காஞ்சிபுரம்.